# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2078 - 2018 ජූනි මස 29 වැනි සිකුරාදා - 2018.06.29

*2078 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1298 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1304 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1294 | நானாவித அறிவித்தல்கள் | - |


***கவனிக்க.-*** (i) அமரதேவ அழகியல் மற்றும் ஆராய்ச்சி நிலையம் சட்டமூலம் 2018, யூன் மாதம் 14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) மதுவரி (திருத்தம்) சட்டமூலம் 2018, யூன் மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2018, யூலை மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, யூலை மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# ஆய விற்பனையும் குத்தகையும்

**கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடுதல் - 2019**

பிரதேச செயலாளர் பிரிவு- கொத்மலை

1982, ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1983 ஆம் ஆண்டினதும் அதன் பின்னரான காலப்பகுதிகளுக்கு உரித்தான கள்ளுத் தவறணைகளில் விற்பனை செய்வதற்கு குத்தகைக்கு கொடுக்கவும், அக் காலப் பகுதியில் செயல்படுத்தப்படும் சகல கலால் வரிகளுக்கும் உட்பட்டு 2019 ஆம் ஆண்டுக்குள் கீழ்க் குறிக்கப்படும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கள்ளுத் தவறணைகளினதும் சில்லறை விற்பனையில் தனியுரிமை கொள்வனவு செய்தல் சம்பந்தமாக கொத்மலை பிரதேச செயலாளர் ஊடாக 2018.08.14 ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. (அ) சகல கேள்விப் பத்திரங்களும் இத் தீவில் உள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெறப்படும் குறிப்பிட்ட விண்ணப்பப்படிவத்தில் மாத்திரமே அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) கேள்விப் பத்திரத்துடன் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிணைப் பணத்தினை எந்தவொரு பிரதேச செயலகத்திலும் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு இணைக்கப்பட வேண்டும்.

(இ) பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட கேள்விதாரரின் சொத்துக்கள் உட்பட அசைவற்ற ஆதனங்களின் பெறுமதிக்கான அத்தாட்சியும் கேள்விப் பத்திரத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

கேள்விப் பத்திரம் மற்றும் அத்தாட்சிகளை சமர்ப்பிக்கும்போது கள்ளுத் தவறணைகளது குத்தகை நிபந்தனைகளுக்கு உட்பட்டவராக கேள்விதாரர் இருத்தல் வேண்டும்.

(ஈ) கேள்விப்பத்திரம் நிரப்பும் போது கீழ் வரும் விடயங்களை கேள்விதாரர் கருத்தில் கொள்ள வேண்டும்.

1. கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்பட்டு கேள்வித்தொகை எழுத்திலும், இலக்கத்திலும் குறிப்பிடப்பட வேண்டும்.
2. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரத்தில் கையொப்பமிடும் சாட்சியாளர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கம் குறிப்பிடப்பட வேண்டும்.
3. பத்திரத்தில் திருத்தங்கள் செய்யப்படின் அவ்விடத்தில் முறையான கையொப்பமும், திகதியும் இடப்பட வேண்டும்.
4. சிறப்புரிமை பெற்ற கேள்விதாரர் தமது தேசிய அடையாள அட்டையின் பிரதியை கேள்விப்பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**மேற் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பிக்கப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.**

3. முறையாக பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரம், பிணைப் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு, சொத்து சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரையிடப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தவறணையின் பெயர், இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதிக்கு முன் கொத்மலை பிரதேச செயலக கேள்விப்பத்திர பெட்டியில் இடல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்புவதாயின் குறிப்பிட்ட திகதிக்கும் நேரத்திற்கும் முன்னராக கொத்மலை பிரதேச செயலாளர், கொத்மலை பிரதேச செயலகம், கொத்மலை என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

4. அட்டவணையில் குறிப்பிடப்படும் கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நேரம் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு கேள்விதாரர் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

5. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்றுக் கொள்ளவோ, நிராகரிக்கவோ பிரதேச செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

6. தேர்ந்தெடுக்கப்படும் கேள்விதாரர் கொள்வனவாளராக தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் குறிப்பிட்ட ஏல விற்பனை திகதியன்று பி.ப 2.00 மணிக்கு முன் கொத்மலை பிரதேச செயலாளரினால் தீர்மானிக்கப்பட்ட 03 தவணைக்குக் குறையாத பிணைப் பணத்தினை கொத்மலை பிரதேச செயலாளருக்கு செலுத்த வேண்டும்.

மேற்படி வைப்பை பூண்டுலோயா மக்கள் வங்கியில் உள்ள பிரதேச செயலாளரின் கணக்கில் ஒரு வருட சேமிப்பாக வைப்பிலிட குத்தகைக்காரர் சம்மதிக்க வேண்டும். மேற்படி வைப்பு காசோலையாகவோ அல்லது இலங்கை வங்கி, மக்கள் வங்கியினால் வழங்கப்படும் பாதுகாப்பான காசுக்கட்டளை மூலமாகவோ செலுத்தப்படல் வேண்டும்.

7. தேவையான முத்திரை கட்டணத்தை செலுத்தி குத்தகைக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

8. நியமிக்கப்படும் தவணைக் கட்டணத்தை காசாக செலுத்தக் கூடியவர்கள் மாத்திரமே கேள்விப் பத்திரம் சமர்ப்பிக்க தகுதியுடையவராவர்.

9. கேள்விப் பத்திரம் கூட்டாக சமர்ப்பிக்கும் சந்தர்ப்பங்களில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரியும் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

10. ஏதாவதொரு தவறணை குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாதவிடத்து கள்ளுத் தவறணை 2018.09.26 ஆந் திகதி மு.ப 10.30 மணிக்கு இந்த நிலையத்தில் குத்தகைக்கு விடப்படும்.

11. மேற்படி தவறணைகள் குத்தகைக்கு விடுவது சம்பந்தமான இறுதித் தீர்மானம் என்னுடையதாகும்.

12. இது தொடர்பான மேலதிக விபரங்களை கொத்மலை பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஈ.ஆர்.எல்.பீ. எட்டம்பாவல,
பிரதேச செயலாளர்,
கொத்மலை.

பிரதேச செயலகம்,
கொத்மலை,
2018, யூன் 07.

**அட்டவணை.**

| இல. | கள்ளுத் தவறணையின் பெயர் | நிறுவப்பட வேண்டிய இடம் | கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி | கேள்விப்பத்திர பிணைப் பணம் ரூபா |
|---|---|---|---|---|
| 1 | கடதொரபிட்டிய | கடதொரபிட்டிய கிராமம் | 2018.08.14 ஆந் திகதி மு.ப. 10.30 மணி | 5,000 |
| 2 | ஒத்தலாவை | தேர்ந்தெடுக்கப்படும் இடத்துக்கு பிரதேச செயலாளரினால் அனுமதி வழங்கப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் | 2018.08.14 ஆந் திகதி மு.ப. 10.30 மணி | 5,000 |
| 3 | கட்டுகித்துல | கட்டுகித்துல கிராமம் | 2018.08.14 ஆந் திகதி மு.ப .10.30 மணி | 5,000 |

6-968/1

---

## கண்டி கடவத்சத்தர கங்க வட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவுக்குள் கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்றல் - 2018/ 2019

1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பகிரங்கப்படுத்தப்பட்ட (பிரசுரிக்கப்பட்ட) 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதிக்கும் ஏற்புடையதாக கள்ளுத் தவறணைகள் குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும் அக்காலப்பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2018/2019 ஆம் ஆண்டில் கள்ளு சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளராகிய என்னால் 2018.08.21ஆந் திகதி முற்பகல் 10.30 மணி வரையில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் உள்ள பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன்–

(அ) கேள்வி வைப்புப் பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்ட குறித்த கேள்விப்பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும்,

(ஆ) கேள்விக்காரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தில் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட தனது சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் கேள்விப் பத்திரத்துடன் இணைத்தல் வேண்டும்.

கேள்விகளையும் சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் முன் வைக்கும் கேள்விக்காரர்களுக்கு மேற்படி கள்ளுத் தவறணைகளை விற்றலுடன் தொடர்புடைய நிபந்தனைப்பத்திரத்தில் அடங்கிய கட்டளைகளை முறையாகக் கடைபிடிக்க வேண்டுமென இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது. கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விக்காரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :–

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடும் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும்.

(ii) நிரப்பிய கேள்விப்பத்திரத்தில் சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விக்காரரின் சுருக்க கையெழுத்தொப்பத்துடன் திகதியும் இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தலும் வேண்டும்.

(iv) பூரணமற்ற விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரத்தை கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட –

(அ) பிரதேச செயலகப் பற்றுச்சீட்டுடனும்,

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழுடனும்,

இணைத்து கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு அந்த கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''தவறணையின் இலக்கமும் பெயரும்'' குறித்து கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவதற்கு முன்பு இடுதல் வேண்டும். அல்லது கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவதற்கு முன்பு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. குத்தகை தொடர்பாக கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விக்காரரும் கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்தில் சமுகமளித்திருத்தல் வேண்டும்.

5. திருப்தியாக கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விக்காரர், சிறப்புரிமைகளை வாங்கியவர் என பிரகடனப்படுத்தப்பட்ட பின் அன்றைய தினம் பி. ப. 2.30 மணிக்கு முன்பு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்தில் வைப்பில் இடுதல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப்பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட ''கொடுப்பனவுக்காக'' என குறிப்பிட்ட காசோலையொன்றினால் அல்லது இலங்கை வங்கியினாலோ, மக்கள் வங்கியினாலோ வழங்கப்பட்ட ''பாதுகாப்பான காசோலை'' என அழைக்கப்படும் காசோலையினாலோ அல்லது வங்கியொன்றினால் அவ்வங்கியின் பெயருக்கு வழங்கப்பட்ட காசோலையொன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும். தேவையானளவு முத்திரைகளை ஒட்டி மதுவகை தவறணைகள் ஒப்பந்தப்பத்திரத் தொகுதியில் கையொப்பமிடல் வேண்டும்.

6. ஒப்பந்தப்படி உடன்படும் கேள்விப் பணத்தொகையை தவணை முறையில் ரொக்கப் பணத்தில் மாத்திரம் செலுத்துதல் வேண்டும்.

7. ஏதாவது ஒரு கேள்விப்பத்திரத்தை பலபேர் சேர்ந்து முன்வைப்பதாயின் அந்த ஒவ்வொரு ஆளினதும் சொந்த முகவரியை வெவ்வேறாக தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

8. கள்ளுத் தவறணைகளிலோ பிற அனுமதிப்பத்திரம் உடைய இடங்களிலோ விற்பனைக்காக மொத்தமாக பீப்பாய்க் கணக்கில் கள் விநியோகிக்கப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

9. கண்டி எசல பெரஹரா நடைபெறும் வேளையிலும் வேறு காரணங்களுக்காகவும் இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் 1 ஆம் இலக்க கள்ளுத் தவறணையை தற்காலிகமாக மூடுவதற்கு என்னால் கட்டளையொன்றை விடுக்க வேண்டி ஏற்பட்டால், அவ்வாறு தவறணையை மூடும் காலப்பகுதிக்கு தவறணைக் கால வரையறையில் சலுகை ஏற்பாடு செய்யப்பட மாட்டாது.

10. மேற்படி கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் விற்பனை செய்யமுடியாதுபோன எஞ்சிய கள்ளுத் தவறணைகளை மீண்டும் 2018.10.12 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு விற்பனை செய்யப்படும். அன்றைய தினம் கேள்விப்பத்திரங்களை இந்த வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும் அறிவித்தலில் குறிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்ப முன்வைத்தல் வேண்டும்.

11. எனது முடிவே இந்த கேள்விகளை (டென்டர்) விற்பனை செய்வதற்கான இறுதி முடிவாகும்.

12. தவறணைகளை விற்பனை செய்வதற்குரிய ஒப்பந்த நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் இந்த அலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ள முடியும்.

பி. எம். பீ. ஜீ. பீ. வீ. பண்டார,
பிரதேச செயலாளர்,
கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை.

பிரதேச செயலகம்,
கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை,
2018, யூன் 08.

**அட்டவணை**

**கண்டி மாவட்டத்தில் அனுமதியளிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளின் பட்டியல் - 2018/2019**

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணையை அமைக்கவேண்டிய பிரிவு | தவறணை திறந்திருக்கும் நேரம் | கேள்விப் பத்திரங்களை (டென்டர்) ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|
| இல. 01 வட்டபுலுவ | கண்டி பிரிவில் இல. 20 மாயாவ மற்றும் இல. 7, மாபனா வதுர தேர்தல் பிரிவு | கட்டுகஸ்தொட்டை வீதியில் அந்த வீதியும் திருகோணமலை வீதி சந்தியில் கட்டுகஸ்தொட்டை வீதியும் வட்டாரந்தென்ன சந்திக்கும் இடையிலான பாதை கண்டி மாநகரில் இல. 20 - மாயாவ மற்றும் இல. 07 - மாபனாவதுர தேர்தல் பிரிவில் அமைந்துள்ள பிரதேசம் | மு. ப. 11.00 மணி தொடக்கம் பி. ப. 2.00 மணிவரை மற்றும் பி. ப. 5.00 மணி தொடக்கம் பி. ப. 8.00 மணி வரை | 2018.08.21 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை |

**கள்ளுத்தவறணை குத்தகை கேள்விகளுக்கான இறுப்புப் பணம் - 2018/2019**

| | | | |
|---|---|---|---|
| இல. 01 | வட்டபுலுவ | கள்ளுத் தவறணைக்கான குத்தகை | ரூபா 5,000 |

6-969/1

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர்: அசங்க டிரேடிங் (பிறைவேட்) லிமிடட்
பதிவிலக்கம்: பீவீ 00200301
பதிவு முகவரி : இல. 59, மெயின் வீதி, ஹன்வெல்ல
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.05. 15

கம்பனிப் பணிப்பாளர்.

6- 960

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர்: இக்கோரிச் ஹைட்ரோபோனிக் (பிறைவேட்) லிமிடட்
பதிவிலக்கம்: பீவீ 129624
பதிவு முகவரி : இல. 05/240, நீர்கொழும்பு வீதி, பன்னல
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.02. 07

கம்பனிப் பணிப்பாளர்.

6- 961

## ரோஸ் பீல்ட் பிளான்டேஷன்ஸ் ( பிறைவேட்) லிமிட்டட்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழான, கூட்டிணைப்பு தொடர்பான அறிவித்தல்

"ரோஸ் பீல்ட் பிளான்டேஷன்ஸ் ( பிறைவேட்) லிமிட்டட் " என்ற பெயரில் புதிய கம்பனி ஒன்றை 2018 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன் அதன் கம்பனி பதிவு இலக்கம் பீவீ 131916 என்றும் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 15/B , பெரஹர மாவத்தை, கொழும்பு3 எனும் முகவரியில் அமைந்துள்ளது என்றும் இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருகின்றோம்.

எம் அன்ட் ஏ கம்பனி செக்ரடரீஸ் ( பிறைவேட்) லிமிட்டட்
(கம்பனிச் செயலாளர்கள்).

C/o நித்தி முருகேசு அன்ட் அசோசியேட்ஸ்,
சட்டத்தரணிகள்.

இல. 28, (2 ஆம் மாடி)
டபிள்யூ . ஏ . டீ .ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 02.

6- 974

## பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்:-

கம்பனியின் பெயர் : டி- பிலேன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இல.: பீவீ 00200098
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.05.02
பதிவு அலுவலகம் : 97ஏ, காலி வீதி, கொழும்பு 3

பணிப்பாளர்.

6- 991

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் கீழே குறிப்பிட்டவாறு 2013 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப் படுகின்றது.-

கம்பனியின் பெயர் :எட்டர்னிட்டி இன்டநெசனல் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 129139
பதியப்பட்ட அலுவலகம் : இல.189/எம்/4, மகாவித்தியாலயம் வீதி, கொழும்பு 13
பதிவு செய்யப்பட்ட திகதி : 2018.01.18

கம்பனிச் செயலாளர்.

6- 1007

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனியானது 2018 ஆம் ஆண்டு மாசி மாதம் 08 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது.-

கம்பனியின் பெயர் : எல் டி பார்க் சொலுயுசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 00200696
பதிவு செய்யப்பட்ட முகவரி :இலக்கம் 08, கோயில் வீதி, மஹரகம

கம்பனிச் செயலாளர்.

6- 1107

## லங்கா ஒறிக்ஸ் புறொஜெக்ட் டெவலப்மண்ட் லிமிட்டட் ( பீபி 153) இனது கடன்கொடுத்தோர் மூலமான தன்னிச்சையான கலைவு

பின்வரும் நோக்கங்களுக்காக இராஜகிரிய, ஸ்ரீ ஜயவர்தன புர மாவத்தை, 100/1, ஆம் இலக்கத்தில் 2018, யூலை 06 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு மேலே பெயர்

குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கடன்கொடுத்தோரினால் கூட்டமொன்று நடைபெறுமென 2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்ட 344(2) ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

கம்பனியின் இயக்குநர்களினால் தயாரிக்கப்பட்ட நிறுவனத்தின் விவகாரங்களின் அறிக்கையை கடன்கொடுத்தோருக்கு முன்வைக்கப்பட வேண்டும்.

கம்பனியின் கடன்கொடுத்தோர்களினால் சுய விருப்பத்துடனான முடிவுறுத்தலை அங்கீகரித்தல் /பரிசீலித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 355 ஆம் பிரிவின் பிரகாரம் கலைப்பாளர் ஒருவரை நியமித்தல்

பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்,

லங்கா ஒறிக்ஸ் புறொஜெக்ட் டெவலப்மெண்ட் லிமிட்டட்
நிறுவனத்தின் செயலாளர்,
(திருமதி) கிரிசாந்தி இம்மானுவேல்.

2018, யூன் 14.

6- 1112

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் , சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், கேகாலை கச்சேரி அடிப்பாதை இலக்கம் 23/1 எனும் முகவரியில் வசிக்கும் அற்றோணி உரிமையாளராகிய கிரிசாந்த ஸ்ரீ சிரந்த அத்துகல ( தேசிய அடையாள அட்டை இலக்கம் 853620874V) ஆகிய நான், சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமாகிய திருமதி ஜீ. ஆர். அனோமா லக்மினி குமாரி என்பவரால் 2016.09.27 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 188ஐக் கொண்ட அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் பிரகாரம் இலக்கம் 34, திலிந்துகம, கேகாலையில் வசித்து வந்த தற்போது இலக்கம் 65/3, பானகாவ, கேகாலை,இந்திக பேக் ஹவுஸ் எனும் முகவரியில் வசிக்கும் பேடிதுரகெ ஜயதிலக்க ( தேசிய அடையாள அட்டை இலக்கம் 531052544V) என்பவரை எனது அற்றோணி தத்துவக்காரராக நியமித்திருந்தேன். இந்த அற்றோணி தத்துவத்தை நிராகரித்து வலிதற்றதாக்கி செல்லுபடியற்ற தாக்குகின்றேன் என்பதை இலங்கைச் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் மேலே கூறப்பட்ட பேடிதுரகெ ஜயதிலக்க என்பவரால் இதன் பின்னர் எனது அற்றோணி தத்துவக்காரராக மேற்கொள்ளப்படும் எவ்வித கொடுக்கல் வாங்கல்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கிரிசாந்த ஸ்ரீ சிரந்த அத்துகல,
அற்றோணி உரிமையாளர்.

6-985

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

விஜயகோன் முதியன்சேலாகே வசந்தா விஜேகோன் (தே.அ.அ.இல. 676142649V) ஆகிய நான், இல. 50, புஞ்சி மோல, எல்கடுவை வீதி, வத்தேகமை என்ற முகவரியில் வசிக்கும் உடகெதர அஜித் பிரியந்த ( தே.அ.அ.இல. 783301903 V) என்பவருக்கு வழங்கியிருந்த, பிரசித்த நொத்தாரிசு நவரத்தின பண்டார மடுகல்ல மூலம் தயாரித்து அத்தாட்சிப்படுத்திய இல. 269 கொண்ட விசேட அற்றோணித்தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்து நீக்கி விட்டேன் என்பதையும் இதன் பின்னர் மேற்கூறிய அற்றோணித்தத்துவக்காரர் எனது சார்பாகவோ அல்லது எனது பெயராலோ மேற்கொள்ளும் எத்தகைய கொடுக்கல் வாங்கல்களுக்கோ அல்லது செயற்பாடுகளுக்கோ நான் பொறுப்பல்ல என்பதையும் தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

6-994

---

## அற்றோணித் தத்துவத்தினை இரத்துச் செய்தல்

களுத்துறை வடக்கு, உதுரு ஸ்ரீ சுமங்கல வீதி, இல. 50, "சிறிநிவஸ" என்ற முகவரியில் வசிக்கும் க்ரிஷான்த ஜானக விஜேசேகர (தே.அ.அ.இல. 196516501034) ஆகிய நான், களுத்துறை மாவட்டம், வஸ்கடுவை , மஹவஸ்கடுவை, இல. 114 இல் வசிக்கும் ஜாமுனி சுமித் ஜயந்த த சில்வா என்பவருக்கு வழங்கப்பட்ட கீழ்க்குறிப்பிடப்படும் அற்றோணித்தத்துவங்கள் 2018.06.01 ஆந் திகதி முதல் செயல்வலுப்பெறும் வகையில் இரத்துச் செய்யப்படுகின்றதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் இலங்கை வாழ் பொதுமக்கள் அனைவருக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

குறித்த அற்றோணித்தத்துவங்களாவன:

1. களுத்துறை பிரசித்த நொத்தாரிசு திருமதி ரஞ்சிதா பி. நவரத்ன என்பவரினால் 2018, யூன் 07 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1316 ஆம் இலக்கமுடைய அற்றோணித் தத்துவம்,

2. களுத்துறை பிரசித்த நொத்தாரிசு திரு. பி.டீ. ஹெட்டிஆரச்சி என்பவரினால் 2011.01.28 ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட 5850 ஆம் இலக்கமுடைய அற்றோணித் தத்துவம்,

3. களுத்துறை பிரசித்த நொத்தாரிசு திருமதி பி. ஐ. எம் தாமுனகே என்பவரினால் 2013.11.18 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 94 ஆம் இலக்கமுடைய அற்றோணித் தத்துவம்,

4. 2015.04.08 ஆம் திகதி என்னால் வெளிநாடொன்றில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நுகேகொடை பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தின் அத்தியாயம் 160, பக்கம் 36 தினப்புத்தக இலக்கம் 2407 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள விசேட அற்றோணித் தத்துவம் .

க்ரிஷான்த ஜானக விஜேசேகர,

6- 1051

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பிலியந்தலை, கெஸ்பேவ, ஹொரணை வீதி, மாவித்தர வடக்கு, மீகஹ பிளேஸ், இல. 16 சீ எனும் இடத்தில் குடியிருக்கும் ஆனந்த விக்கிரமசிங்க (தே.அ.அ.இல. 680842710V) ஆகிய நான், மடபாத, மாகந்தன , அரலிய உயன, இல. 65/13 எனும் இடத்தில் குடியிருக்கும் நொயேல் பிரியந்த விக்கிரமசிங்க ( தே.அ.அ.இல. 770440335V) என்பவருக்கு வழங்கப்பட்ட கொழும்பு மாவட்ட பிரசித்த நொத்தாரிசு தர்ம ஸ்ரீ ஸ்ரீயாசிங்க அவர்களால் 2016.08.12 ஆந் திகதி எழுதி உறுதி செய்யப்பட்டு, நாட்பதிவேட்டு இல. 8493 பொது அற்றோணி தத்துவப் பத்திரத்தை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் இரத்துச் செய்கின்றேன். இதன்பின் குறிப்பிட்ட நபரால் எனது சார்பாக புரியப்படும் ஏதேனும் செயல்களுக்கு மற்றும் கொடுக்கல் வாங்கல்களுக்கு நான் எதுவித பொறுப்பையும் வகிக்க மாட்டேன் எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்கள் அனைவருக்கும் இத்தால் அறிவித்தல் தருகின்றேன்.

ஆனந்த விக்கிரமசிங்க
அற்றோணி தத்துவக்காரர்.
தேவஹெட்டிகே லக்ஷான் நந்துக சில்வா மூலம்.

2018 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆந் திகதி.

6-1109

## அற்றோணித் தத்துவத்தை இல்லாதொழித்தல்

கனடா, ஒன்ராறியோ, MIP 4W1 ஸ்காபொறோ டன்டோக் டிரைவ் 48, இல. 30 என்ற முகவரியைச் சேர்ந்த விஞ்ஞானலிங்கம் கார்த்திகேசு ஆகிய நான், மொறட்டுவை, சொய்சா தொடர்மாடி, இல. C27-1/1 என்ற முகவரியைச் சேர்ந்த சௌபாக்கியவதி கணேசன் என்பவருக்கு என்னால் அளிக்கப்பட்ட கனடா கியுபெக் H1N 3R5 மொன்றியல், 5777 ஷேர்புரூக் Est # 203 என்ற முகவரியைச் சேர்ந்த சட்டத்தரணி மைரியம் ஹார்பெக் அவர்களால் வரையப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 18 ஆந் திகதியிடப்பட்ட அற்றோணித் தத்துவத்தை உடனடியாக பயனுறும் வகையில் 2018.05.14 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்து இல்லாதொழிக்கின்றேன். அத்துடன் இதன் பின்னர் சொல்லப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் கீழ் அவரால் செய்யப்படும் எவ்வித செயலுக்கும் நான் பொறுப்பாளியல்ல எனவும் வெளிப்படுத்தி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

விஞ்ஞானலிங்கம் கார்த்திகேசு.

6-1111

# அந்நியக் குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

## வெளிநாட்டு மதுபான தவறணைகளை குத்தகைக்கு விடுதல்-2019

பிரதேச செயலாளர் பிரிவு- கொத்மலை

1982, ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1983 ஆம் ஆண்டிற்கும் அதன் பின்னரான காலப்பகுதிக்கும் செல்லுபடியான வெளிநாட்டு மதுபான வகைகளையும் (தானியங்களைக் கொண்டு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மதுபான வகைகள் உட்பட) தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கும் அக் காலப் பகுதியில் செயல் படுத்தப்படும் சகல மதுவரி நிபந்தனைகளுக்கும் உட்பட்டு 2019 ஆம் ஆண்டில் கீழ்க் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வெளிநாட்டு மதுபானங்களை (தானியங்களைக் கொண்டு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மதுபான வகைகள் உட்பட) சில்லறை விற்பனை செய்யும் தனியுரிமை கொள்வனவிற்காக கொத்மலை பிரதேச செயலாளரினால் 2018.08.15 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. (அ) சகல கேள்விப் பத்திரங்களும் இத் தீவில் உள்ள எந்தவொரு பிரதேச செயலகத்தில் இருந்தும் பெற்றுக்கொள்ளப்படும் குறிப்பிட்ட விண்ணப்ப படிவத்தில் மாத்திரமே அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) கேள்விப் பத்திரத்துடன் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிணைப் பணத்தினை ஏதேனுமொரு பிரதேச செயலகத்தில் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலுத்தி பெற்றுக் கொண்ட உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டு இணைக்கப்பட வேண்டும்.

(இ) கேள்விதாரரின் காணி, நிலம் போன்ற அசைவற்ற ஆதனங்கள் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்கள் பற்றிய சான்றிதழை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பத்திரம் மற்றும் சொத்துச் சான்றிதழ்களை சமர்ப்பித்தல் தொடர்பில் மேற்கூறிப்பிட்ட வெளிநாட்டு மதுபான சாலைகளினது குத்தகை நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விதிமுறைகள் முறையாக கடைப்பிடிக்கப்பட வேண்டும் என கேள்விதாரருக்கு அறிவிக்கப்படுகின்றது.

**(ஈ) கேள்விப்பத்திரம் நிரப்பும் போது கீழ் வரும் விடயங்களை கேள்விதாரர் கருத்தில் கொள்ள வேண்டும்.**

1. கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்பட்டு கேள்வித்தொகை எழுத்திலும், இலக்கத்திலும் குறிப்பிடப்பட வேண்டும்.

2. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரத்தில் கையொப்பமிடும் சாட்சியாளர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கம் குறிப்பிடப்பட வேண்டும்.

3. பத்திரத்தில் திருத்தங்கள் செய்யப்படின் /வெட்டப்படின் அவ் ஒவ்வொரு இடத்திலும் கேள்விதாரர் முழுமையான கையொப்பத்தையும் திகதியையும் இட வேண்டும்.

4. அனைத்து கேள்விதாரரும் தமது தேசிய அடையாள அட்டையின் பிரதியை கேள்விப்பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பிக்கப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.**

3. முறையாக பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரம், பிணைப் பணம் செலுத்திய உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டு, சொத்து சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரையிடப்பட்ட கடித உறையின் மேல் பக்க மூலையில் தவறணையின் பெயர், இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதி திகதிக்கு முன் கொத்மலை பிரதேச செயலக கேள்விப்பத்திர பெட்டியில் இடல் வேண்டும். கேள்விப்பத்திரத்தை தபாலில் அனுப்புவதாயின் பிரதேச செயலாளருக்கு கிடைக்கக் கூடியாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

4. கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நேரம் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த நேரத்திற்கு கோள்விதாரர் பிரதேச செயலகத்துக்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

5. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு உரித்தாகும்.

6. தேர்ந்தெடுக்கப்படும் கேள்விதாரர் கொள்வனவாளராக அறிவிக்கப்படுவதுடன், அன்றைய தினம் பி.ப 2.00 மணிக்கு முன் பிணை வைப்புத் தொகையாக கொத்மலை பிரதேச செயலாளரினால் தீர்மானிக்கப்படக்கூடிய 3 தவணைகளுக்கு குறையாத தொகையை பிணைவைப்புத் தொகையாக கொத்மலை பிரதேச செயலாளருக்கு வைப்பிலிடல் வேண்டும். மேற்படி வைப்பை பூண்டுலோயா மக்கள் வங்கியில் வருடாந்த நிலையான வைப்புக் கணக்கில் வைத்திருப்பதற்கு கேள்விதாரர் இணக்கம் தெரிவித்தல் வேண்டும். இவ்வைப்பை பணம் மூலமாகவோ அல்லது வங்கி மூலமாகவோ செலுத்துவதென குறிப்பிடப்பட்ட காசோலை மூலமாகவோ அல்லது இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கியினால் வழங்கப்படும் பாதுகாப்பான காசுக்கட்டளை மூலமாகவோ செலுத்துதல் வேண்டும்.

7. தேவையான முத்திரைக் கட்டணத்தைச் செலுத்தி குத்தகைக்காரர் நிபந்தனைகளிலும் , ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடல் வேண்டும்.

8. இணக்கம் தெரிவிக்கப்படும் தவணைக் கட்டணத்தை மாதாந்தம் பணமாக செலுத்தக் கூடியவர்கள் மாத்திரமே கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்க தகுதியுடையவராவர்.

9. கேள்விப் பத்திரம் கூட்டாக சமர்ப்பிக்கும் சந்தர்ப்பங்களில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரியும் வேறு வேறாக தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

10. ஏதாவதொரு கள்ளுத் தவறணை குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாதவிடத்து 2018.09.26ஆந் திகதி மு.ப 10.30 மணிக்கு இந்த நிலையத்தில் மீண்டும் குத்தகைக்கு விடப்படும்.

11. மேற்படி தவறணைகள் குத்தகைக்கு விடுவது சம்பந்தமான இறுதித் தீர்மானம் என்னுடையதாகும்.

12. குத்தகைக்கு விடல் , உரிய நிபந்தனைகள் மற்றும் ஏனைய மேலதிக விபரங்களை கொத்மலை பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஈ.ஆர்.எல்.பீ. எட்டம்பாவல
பிரதேச செயலாளர்,
கொத்மலை.

பிரதேச செயலகம்,
கொத்மலை,
2018, யூன் 07.

**அட்டவணை.**

| கள்ளுத் தவறணையின் பெயரும் இலக்கமும் | நிறுவப்பட வேண்டிய இடம் | கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி | கேள்விப்பத்திர பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|
| வெளிநாட்டு மதுபான தவறணை- இல.2, பூண்டுலோயா | பூண்டுலோயா நகரம், மேல்கடை வீதி, | 2018.08.15 ஆந் திகதி மு.ப 10.30 மணி | 5,000 |

6-968/2

## கண்டி கடவத்சத்தர கங்க வட்ட கோறளை பிரதேச செயலாளர் பிரிவுக்குள் வெளிநாட்டு மதுபான தவறணைகளை குத்தகைக்கு விற்றல் - 2018/ 2019

*1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பகிரங்கப்படுத்தப்பட்ட (பிரசுரிக்கப்பட்ட) 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதிக்கும் ஏற்புடையதாக வெளிநாட்டுக் குடி வகைகள் குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும் அக்காலப் பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2018/2019 ஆம் ஆண்டில் வெளிநாட்டு மதுபானம் சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோறளை பிரதேச செயலாளராகிய என்னால் 2018.08.23 ஆந் திகதி முற்பகல் 10.30 மணி வரையில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் உள்ள பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும் ; அத்துடன் -*

*(அ) கேள்வி வைப்புப் பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்ட குறித்த கேள்விப்பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும்;*

*(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தில் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட தனது சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் கேள்விப் பத்திரத்துடன் இணைத்தல் வேண்டும்.*

*கேள்விகளையும் சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் முன் வைக்கும் கேள்விப்பத்திரதாரர்களுக்கு மேற்படி பிறநாட்டு மதுபான தவறணைகளை குத்தகைக்கு விற்றலுடன் தொடர்புடைய நிபந்தனைப்பத்திரத்தில் அடங்கிய கட்டளைகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டுமென இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது. கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விக்காரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :-*

(i) *கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடும் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும்.*

(ii) *நிரப்பிய கேள்விப்பத்திரத்தில் சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.*

(iii) *அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருந்தாலும் கேள்விப்பத்திரதாரரின் சுருக்க கைஔப்பத்துடன் திகதியும் இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தலும் வேண்டும்.*

(iv) *பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரத்தை கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட -*

*(அ) பிரதேச செயலகப் பற்றுச்சீட்டுடனும்,*

*(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழுடனும்,*

*இணைத்து கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அந்த கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தவறணையின் இலக்கமும் பெயரும்" குறித்து கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோறளை பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவதற்கு முன்பு இடுதல் வேண்டும். அல்லது கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவதற்கு முன்பு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோறளை பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.*

*4. குத்தகை தொடர்பாக கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விப்பத்திரதாரரும் கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோறளை பிரதேச செயலகத்தில் சமுகமளித்திருத்தல் வேண்டும்.*

*5. திருப்தியாக கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விப்பத்திரதாரர், சிறப்புரிமைகளை வாங்கியவர் என பிரகடனப்படுத்தப்பட்ட பின் அன்றைய தினம் பி. ப. 2.30 மணிக்கு முன்பு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோறளை பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோறளை பிரதேச*

செயலகத்தில் வைப்பில் இடுதல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப்பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" எனக் குறிப்பிட்ட காசோலையொன்றினால் அல்லது இலங்கை வங்கியினாலோ, மக்கள் வங்கியினாலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ அல்லது வங்கியொன்றினால் அவ்வங்கியின் பெயருக்கு வழங்கப்பட்ட காசோலையொன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும். தேவையானளவு முத்திரைகளை ஒட்டி மதுவகை தவறணைகள் ஒப்பந்தப்பத்திரத் தொகுதியில் கையொப்பமிடல் வேண்டும்.

6. ஒப்பந்தப்படி உடன்படும் கேள்வி பணத்தொகையை தவணை முறையில் ரொக்கப் பணத்தில் மாத்திரம் செலுத்துதல் வேண்டும்.

7. ஏதாவது ஒரு கேள்விப்பத்திரத்தை பலபேர் சேர்ந்து முன்வைப்பதாயின் அந்த ஒவ்வொரு ஆளினதும் சொந்த முகவரியை வெவ்வேறாக தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

8. வெளிநாட்டு மதுபான தவறணைகளிலோ பிற அனுமதிப்பத்திரம் உடைய இடங்களிலோ விற்பனைக்காக மொத்தமாக பீப்பாய்க் கணக்கில் வெளிநாட்டு மதுபானம் விநியோகிக்கப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

9. கண்டி எசல பெரஹரா நடைபெறும் வேளையிலும் வேறு காரணங்களுக்காகவும் இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் 1 ஆம் இலக்க வெளிநாட்டு மதுபானத் தவறணையை தற்காலிகமாக மூடுவதற்கு என்னால் கட்டளையொன்றை விடுக்க வேண்டி ஏற்பட்டால், அவ்வாறு தவறணையை மூடும் காலப்பகுதிக்கு குத்தகைக் கால வரையறையில் சலுகை ஏற்பாடு செய்யப்பட மாட்டாது.

10. மேற்படி கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் விற்பனை செய்யமுடியாதுபோன எஞ்சிய வெளிநாட்டு மதுபான தவறணைகளை 2018.09.28ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும். அன்றைய தினம் கேள்விப்பத்திரங்களை இந்த வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும் அறிவித்தலில் குறிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்ப முன்வைத்தல் வேண்டும்.

11. எனது முடிவே இந்த கேள்விப் பத்திரங்களை (டென்டர்) விற்பனை செய்வதற்கான இறுதி முடிவாகும்.

12. தவறணைகளை குத்தகைக்கு விற்பனை செய்வதற்குரிய ஒப்பந்த நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் இந்த அலுவலகத்தில் கேட்டு பெற்றுக் கொள்ள முடியும்.

பி. எம். பீ. ஜீ. பீ. வீ. பண்டார,
பிரதேச செயலாளர்,
கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோறளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோறளை,
2018, யூன் 08.

**அட்டவணை**

**கண்டி மாவட்டத்தில் அனுமதியளிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபான தவறணைகளின் பட்டியல் - 2018/2019**

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணையை அமைக்கவேண்டிய பிரிவு | தவறணை திறந்திருக்கும் நேரம் | கேள்விப் பத்திரங்களை (டென்டர்) ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|
| இல. 01 கொழும்பு வீதி | கண்டி நகரத்தில் இல. 17, யட்டிநுவர மற்றும் இல. 18, கொட்டுகொடல்ல வீதி | கண்டி நகரத்தில் இல.17, யட்டிநுவர மற்றும் இல.18, கொட்டுகொடெல்ல வாக் கெடுப்புப் பிரிவிற்குள் கொழும்பு வீதி மற்றும் காசல் ஹில் வீதி சந்தி யிலிருந்து கொழும்பு வீதி வடுகொடபிடிய பாதையில் சந்திக்கு இடைப்பட்ட பகுதி கொழும்பு வீதி இரு மருங்கிலும் | மு. ப. 11.00 மணி தொடக்கம் பி. ப. 2.00 மணிவரை மற்றும் பி. ப. 5.00 மணி தொடக்கம் பி. ப. 8.00 மணி வரை | 2018.08.23 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை |

***பிறநாட்டு குடிவகை தவறணைகள் குத்தகை கேள்விகளுக்கான இருப்புப்பணம் - 2018/2019***

| | | |
|---|---|---|
| இல. 01 | பிறநாட்டு மதுபான தவறணைக்கான குத்தகை | ரூபா 5,000 |

6- 969/2

---

## ஏல விற்பனைகள்

### ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ — கல்முனைக் கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை*

***அம்பாறை மாவட்டம், கல்முனை நகர சபை எல்லைக்குட்பட்ட கரைவாகுபற்று கல்முனை 01 களஞ்சிய பாதையில் அமைந்துள்ள "மங்களம் கேனி" எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் A. சிங்கராஜா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2003. 05.25 ஆந் திகதிய AS 2003/440 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் மற்றும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 20.84 பேர்ச்சஸ் பரப்பளவானது.***

*இவ்வாதனம் அருணாசலம் லவகுமார் மற்றும் அரசரத்தினம் சுஸ்மீதா என்போர் கடப்பாடுடையதாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடு வைக்கப்பட்ட ஆதனம்.*

***ஆதனத்தை வந்தடைதல்.*** *- ஹற்றன் நஷனல் வங்கி சூழலிலிருந்து களஞ்சிய பாதையில் ( Yard Road) நீதிமன்றம் மற்றும் தொலைத்தொடர்பு அலுவலகத்திற்கு மத்தியில் அமைந்துள்ள எல்லை வரை வந்தால் ( 53 ஆம் இலக்க ஆதனம்) இடது பக்கம் சந்திக்கும் ஒழுங்கைக்குள் வந்தால் இப்பாதையில் வலது பக்கம் அமைந்துள்ள இரண்டாம் காணி குறிப்பிட்ட ஆதனமாகும்.*

*இவ்வாதனத்தை 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.*

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.*** *- 2018.01.19 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2018.01.24 ஆந் திகதிய "லக்பிம","டெயிலி மிரர்"மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

***கொடுப்பனவு முறை.*** *- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள் முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ஏல விற்பனையாளரிடம் ரொக்கமாகச் செலுத்துதல் வேண்டும்:-*

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;

(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);

(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;

(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;

(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 750 ரூபா;

(6) நொத்தாரிசுக் கட்டணம் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா.

*கொள்முதலில் மிகுதி 90%மும், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இல் செலுத்தப்படுதல் வேண்டும்.*

***உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு:*** *சிரேஷ்ட முகாமையாளர், (கடன் அறவிடுதல்) ஹற்றன் நஷனல் வங்கி பீ . எல். சீ. இல. 479, ரி. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 011-2661835, 011- 2661836.*

*ஐ. டபிள்யூ. ஜயசூரிய,*
*நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக*
*வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற*
*ஏல விற்பனையாளர்.*

*இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,*
*லேவெல்ல வீதி,*
*மாவில்மடை,*
*கண்டி.*

*தொலைபேசி இல.: 081-2210595, 071- 8446374, 071-4962449.*

6- 1053

### தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ.- வென்னப்புவ கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான பகிரங்க ஏல விற்பனை*

*மிகவும் பெறுமதிமிக்க வசிப்பிடத்துக்கும் பொருத்தமான சொத்து*

**புத்தளம் மாவட்டம், வென்னப்புவ பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கொலின்ஜாடிய தெற்கு கிராம அலுவலர் பிரிவில் கொலின்ஜாடிய கிராமத்தில் அமைந்துள்ள "தல்கஹவத்த கெபெல்ல தமின்னகஹவத்த கெபெல்ல" எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் டப். லக்ஷ்மன் H. எச். பர்னாந்து என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1999.08.05 ஆந் திகதியிடப்பட்ட 2944 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 01 எனும் காணித்துண்டும் (மேற்கூறிய நிலஅளவையாளரினால் தயாரிக்கப்பட்ட 2016.06.28 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட எல்லைகள் மற்றும் பரப்பளவு) மற்றும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது : 03 றூட் 27.35 பேர்ச் பரப்பளவானது.**

**ஆதனத்தை வந்தடைதல்.-** *கொழும்பு, புத்தளம் பிரதான பாதையில் சுமார் 48 கி.மீ. தூரம் கொலின்ஜாடிய ( ஆதும் சந்தியைக் கடந்து ) வரை வந்து 48 ஆம் கி.மீ. கம்பத்திற்கு சுமார் 75 மீற்றருக்கு முன்னர் இடதுபக்கமாகவுள்ள மேற்கு சூசை பாதைக்கு பிரவேசித்து அப்பாதையில் சுமார் 400 மீற்றர் தூரம் சென்றால் டிரான்ஸ்போமர் மற்றும் ஓட்டுத் தொழிற்சாலையைக் கடந்ததும் இப்பாதையில் வலதுபக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.*

**இவ்வாதனம் சரணி எக்வேரியம் எனும் வியாபாரத்தை நடாத்திச் செல்லும் தனி உரிமையாளரான வர்ணகுலசூரிய சந்திம பிரசாத் ராஜித பர்னாந்து என்பவர் ஈட்டாளராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.**

**2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 17ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.**

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** *2018.06.01 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2018.05.21 ஆந் திகதிய "திவயின", "த ஐலன்ட்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செய்யும் முறை.-** *விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவர்களினால் கீழ்க் காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்:-*

*(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;*

*(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;*

*(3) ஏலவிற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2.5% (நூற்றுக்கு இரண்டரை சதவீதம்) ;*

*(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;*

*(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 750 ரூபா;*

*(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2,000 ரூபா.*

*கொள்முதல் விலையின் மிகுதி 90% , இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும்.*

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.-** *முகாமையாளர், மையப்படுத்தல் (கடன் அறவிடுதல் பிரிவு), தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ , இல. 40, நவம் மாவத்தை, கொழும்பு 2, தொலைபேசி: 011-2448448 .*

*ஐ. டபிள்யூ. ஜயசூரிய,*
*நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற ஏல விற்பனையாளர்.*

*இல.369/1,*
*துட்டுகெமுனு மாவத்தை,*
*லேவேல்ல பாதை,*
*மாவில்மட, கண்டி.*
*தொலைபேசி இல.: 071- 4962449, 071- 8446374.*
*தொலைநகல் இல.:081-2210595.*

*6- 1054*

---

### தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ. - கொட்டாஞ்சேனைக் கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான பகிரங்க ஏல விற்பனை*

*மிகவும் பெறுமதிமிக்க சகல வசதிகளையும் கொண்ட வசிப்பிடத்துக்கு, வியாபாரத்திற்குப் பொருத்தமான சொத்து*

**கம்பஹா மாவட்டம், வத்தளைப் பிரதேச சபை, ஹெந்தலை உப அலுவலகம் எல்லைக்குட்பட்ட ஹேகித்த 169 கிராம அலுவலர் பிரிவில் ஹேகித்த கிராமத்தில் அமைந்துள்ள "ஹெதவககஹ குருந்துவத்த" எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஆர். சமரசிங்ஹ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005.02.13 ஆந் திகதியிடப்பட்ட 4256 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 02 எனும் காணித்துண்டும் மற்றும் அதனுள்ளடங்கும் வரிப்பண இல. 48/1 எனும் மாடிக் கட்டிடமும் மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 11.54 பேர்ச் பரப்பளவானது.**

**ஆதனத்தை வந்தடைதல்.-** *மட்டக்குளியிலிருந்து அலுத்மாவத்தை பாதையில் ஹெந்தல பாதை வரை வந்து எல*

*பாதையூடாக சுமார் 03.5 கி.மீ. தூரம் வந்தால் இப்பாதையில் வலதுபக்கத்தில் புனித பிரிஜட் பூங்கா ( St. Bridget's Garden) அடையலாம். இப்பாதையில் சுமார் 80/100 மீற்றர் தூரம் சென்றால் பாதையின் இடது பக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது. (வரிப்பண இல. 48/1, Canal Road)*

***இவ்வாதனம் கொழும்பு 13 இல் வசிக்கும் அந்தனி லொய்ட் குமார் மற்றும் குரூஸ் அமலேஷ்வரி ஆகியோர் கடப்பாடுடையவர்களாக/ ஈட்டாளராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.***

***2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 17ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.***

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.*** *- 2018.06.01 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2018.05.21 ஆந் திகதிய "திவயின", "த ஐலன்ட்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகை களையும் பார்க்கவும்.*

***கொடுப்பனவு செய்யும் முறை.*** *- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவர்களினால் கீழ்க் காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்:-*

*(1) கொள்வனவு விலையில் 10% (பத்து சதவீதம்) ;*

*(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;*

*(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2.5% (நூற்றுக்கு இரண்டரை சதவீதம்) ;*

*(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;*

*(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 7,500 ரூபா;*

*(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் 2,500 ரூபா.*

*கொள்முதல் விலையின் மிகுதி 90% , இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும்.*

***உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.*** *- முகாமையாளர், மையப்படுத்தல் ( அறவிடுதல் பிரிவு), தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ , இல. 40, நவம் மாவத்தை, கொழும்பு 2, தொலைபேசி: 011-2448448 .*

*ஐ. டபிள்யூ. ஜயசூரிய,*
*நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற ஏல விற்பனையாளர்.*

*இல.369/1,*
*துட்டுகெமுனு மாவத்தை,*
*லேவெல்ல பாதை,*
*மாவில்மட, கண்டி.*
*தொலைபேசி இல.: 071- 4962449, 071- 8446374.*
*தொலைநகல் இல.:081-2210595.*

*6- 1055*

---

### தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ.
### திருகோணமலைக் கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான பகிரங்க ஏல விற்பனை*

***முல்லிப்பொத்தானையைச் சேர்ந்த கலீல் ரஹுமான் ரம்சான்(கடனாளி) கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட கீழ் விபரிக்கப்பட்ட ஆதனங்கள் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.***

***முதலாம் விற்பனை 2018.07.30 ஆந் திகதி பி.ப. 3.00 மணிக்கு***

***திருகோணமலை மாவட்டத்தில், கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் இல. 225K உப்பாறு கிராம உத்தியோகத்தர் பிரிவு கன்டலதியுது கிராமத்தில் அலன்கர்னி பாதையில் அமைந்துள்ள காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் M.A.M. அன்வர் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2011.04.26ஆந் திகதியிடப்பட்ட 372 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 1 எனும் காணியும் மற்றும் அதனுள்ளடங்கும் மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 03 றூட் பரப்பளவானது.***

***மேற்கூறிய காணிக்கு பிரவேசிப்பதற்கு மற்றும் மேற்கூறிய 372ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரதான பாதைக்கு பிரவேசிப்பதற்காக ஒதுக்கப்பட்ட பகுதியும் பின்னால் பிரவேசிப்பதற்காக ஒதுக்கப்பட்ட பகுதியும் அதற்குரிய சகல உரிமைகளும் உட்படும்.***

***ஆதனத்தை வந்தடைதல்.*** *- கிண்ணியா நகரத்தில் புஹாரி சந்தியிலிருந்து குட்டிகரச்சி அலன்கர்னி பாதையில் சுமார் 02 கி.மீ. தூரம் கிண்ணியா இ.போ.ச. டிப்போ சூழல் வரை வந்து சுமார் 250 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் பாதையின் வலது பக்கத்தில் அமைந்துள்ளது.*

***இரண்டாம் விற்பனை 2018.07.30 ஆந் திகதி பி.ப. 3.15மணிக்கு***

***திருகோணமலை மாவட்டத்தில், கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் இல. 225K உப்பாறு கிராம உத்தியோகத்தர் பிரிவு கன்டலதியுது கிராமத்தில் அலன்கர்னி பாதையில் அமைந்துள்ள காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் M.A.M. அன்வர் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2011.04.26 ஆந் திகதியிடப்பட்ட 373 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 1 எனும் காணியும் மற்றும் அதனுள்ளடங்கும் மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 03 றூட் பரப்பளவானது.***

***மேற்கூறிய காணிக்கு பிரவேசிப்பதற்கு மற்றும் மேற்கூறிய 373 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரதான பாதைக்கு***

**பிரவேசிப்பதற்காக ஒதுக்கப்பட்ட பகுதியும் பின்னால் பிரவேசிப்பதற்காக ஒதுக்கப்பட்ட பகுதியும் அதற்குரிய சகல உரிமைகளும் உட்படும்.**

**ஆதனத்தை வந்தடைதல்.**- கிண்ணியா நகரத்தின்புஹாரி சந்தியிலிருந்து குட்டிகரச்சி அலன்கர்னி பாதையில் சுமார் 02 கி.மீ. தூரம் கிண்ணியா இ.போ.ச. டிப்போ சூழல் வரை வந்து மேலும் சுமார் 200 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் பாதையின் வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2018.04.27 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2018.04.23 ஆந் திகதிய "திவயின", "த ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவர்களினால் கீழ்க் காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;

(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;

(3) ஏலவிற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2.5% (நூற்றுக்கு இரண்டரை சதவீதம்) ;

(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;

(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 1,000 ரூபா;

(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2,500 ரூபா.

